ப்லவ ஹு மார்கழி மீ
டிஸம்பர் 2021 - ஜனவரி 2022

ஸ்ரீ:

மலர்: 4
இதழ்: 9

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஶம்

MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com

ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் : ஜனவரி 4 முதல் 13 வரை

ப்லவ ஆண்டு மார்கழி மீ
டிஸம்பர் 2021 - ஜனவரி 2022

மலர்: 4
இதழ்: 9

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஸ்ரீ பகவத்கீதையில் 'விபூதி அத்யாயம்' எனும் 10-வது அத்யாயத்தில், ஸ்ரீ கண்ணன், எல்லா வஸ்துக்களும் எனது உடைமைகள்; ''அவைகளின் ஸமூஹத்தில் எவை எல்லாம் உயர்ந்ததுவோ, அவையாக நான் இருக்கிறேன்'' என பல உவமைகளைச் குறிப்பிடும் தருணத்தில், ''மாஸாநாம் மார்க்கசீர்ஷோஹம்'' (மாதங்களில் உயர்ந்ததான மார்கழியாக இருக்கிறேன்) என்கிறார்.

நமக்கு ஒரு ஸந்தேஹம் – மார்கழி, சூன்ய-மாஸம் என்றும்; சுப கார்யங்களுக்கு உகந்தது அல்ல, என்றல்லவோ உலக-வழக்கு. ஆக, அது எப்படி சிறந்த காலமாகும்? என.

ஸ்ரீபகவத் கீதைக்கு உரை நூலான தன் 'தாத்பர்ய சந்த்ரிகை'யில், இதற்கு விளக்கமளிக்கிறார் தூப்புல் வள்ளல். அவையாவன –

1) சிறந்ததான தமிழ் வருடத் தொடக்கமான தைத்திங்களுக்கு, கர்ப்பம் உண்டாகும் காலமாய் விளங்குவது, மார்கழி;

2) ஒவ்வொரு தமிழ் மாதத்துக்கும், எம்பெருமானின் பன்னிரண்டு வ்யூஹ அவதாரங்களான கேசவாதிகள் ஒவ்வொருவரையும், அதிஷ்டான தேவதையாக ப்ரமாணங்கள் கூறுகின்றன; அம்முறையில், வ்யூஹத்தின் முதலாவதான 'கேசவன்', மார்கழிக்கு தேவதையாக கணக்கிடப்-படுகிறான்; ('கேசவனைப்பாட' – திருப்பாவை - 7 பார்க்க)

3) மேலும், அனைத்து தபஸ்ஸுக்களும் / வ்ரதங்களும் தொடங்கப்படும் காலமும் ஆகிறது, மார்கழி. ஸரி; தபஸ்ஸுக்கள் கணக்கற்றவைகளாக இருக்கின்றனவே; அவற்றுள் சிறந்தது எது? எனில், 'ந்யாஸம் எனப்படும் சரணாகதிதான் மிக உயர்ந்தது' என்கிறது உபநிஷத். இதனை அநுஷ்டிக்க நம்மைத் தூண்டுவது இந்த மார்கழி மாதம் என்கிறார் ஆண்டாள், 'மார்கழி (அஹங்காரத்தை விட்டொழித்த) திங்கள் மதி நிறைந்த நன்னாளால்' என. எளிதான இவ்வுபாயத்தை அனைவரும் கைக்கொண்டு உய்ந்துபோகும்படி உபதேசிக்கிறார், நம் ஸ்வாமி. அநுஷ்டித்தவரோ, உபாய நிஷ்டையுடன், மோக்ஷ-புருஷார்த்தத்தை எதிர்நோக்கி நிற்போமாக!

இம்மாத ஸஞ்சிகையில், நாம் அனுபவிக்க இருப்பவை விசேஷ வ்யாஸங்களுடன் கீழ்கண்ட உத்ஸவங்களின் வண்ணப்படங்கள்:-

- ✓ திருக்கார்த்திகை தீபோத்ஸவம்
- ✓ கலியன் திருநக்ஷத்ரம்
- ✓ திருப்பாண் ஆழ்வார் திருநக்ஷத்ரம்
- ✓ பஞ்சமி தீர்த்த உத்ஸவம்
- ✓ பஞ்சபர்வ உத்ஸவங்கள்

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

Significance of Margazhi

TRUSTEES' NOTE

The month of Margaseersha (Dhanur Maasam), known as Margazhi in Tamil, is considered auspicious and conducive for an Upasaka's endeavour in spiritual uplift -- be it Sadhana, Vrata, Bhajan or Pooja. Significantly, Lord Krishna identifies Himself with this month by saying "Maasaanaam Margaseershoham" (Amongst the months, I am Margazhi). It is a belief that those who wake up very early in the morning and perform pooja during this month reap the benefit of doing pooja the whole year.

It is a tradition that everyone, including women and children, wakes up early morning, recites Thiruppavai and other verses/Slokas at home before visiting nearby temples every day during this month. The early morning group Bhajans in and around the Mada streets of Mylapore are an enchanting sight. Young children reciting Thiruppavai during the 10-day Andal Neeratta Utsavam purappadu at our temple is an encouraging sign in the context of keeping up the tradition.

Besides the religious context, music and dance festivals -- collectively known as the Margazhi Festival – brings out the spirit of Carnatic Music and traditional dance forms in all their glory, thereby, augmenting the stature of his month.

It is also during Margazhi that important festivals like Pagal Pathu and Iraappathu are celebrated (22 days in all). The Vaikunta Ekadasi Utsavam is scheduled to be held on Jan. 13 with the opening of Paramapadha Vaasal. Thondaradippodi Azhwar Satrumurai (Jan. 1) is another Utsavam of note during the month.

The Devasthanam is also planning to perform a '100 Thadaavinil Akkaravadisil Utsavam' for

'Koodaaraivalli' (Jan. 11). Those who register for this will receive Akkaravadisil Prasadam in the 'Thada' vessel (silver bowl). The temple office may be contacted for further details and registration.

During the month of Karthikai, Panchami Theertham Utsavam with Theerthavaari for Alarmelmangai Thayar, Kaliyan Satrumurai, ThirukKarthikai Deepotsavam and Thiruppaan Azhwar Satrumurai were performed.

On the request of the Mylapore Zonal Office of the Chennai Corporation, our Devasthanam donated 50 sets of Dhotis and Sarees to those affected by the floods in the city last month.

In view of the emergence of Omicron, a new variant of the coronavirus, resumption of outside procession for temple festivals could be further delayed. Meanwhile, all Utsavams with Purappadu will be held inside the premises. ❊

ஸ்ரீ:

ப்லவ வருட மார்கழி மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயம்
டிஸம்பர் / ஜனவரி	மார் கழி					
16/12/2021	1	த்ரயோதசி	வியாழன்	பரணி	தநுர் மாத பிறப்பு - காலை 9.20க்கு தநுர்மாத பூஜா ஆரம்பம்	
17/12/2021	2	சதுர்தசி	வெள்ளி	க்ருத்திகை	திருமங்கையாழ்வார்	
18/12/2021	3	பௌர்ணமி	சனி	ரோஹிணி	திருப்பாணாழ்வார்	
19/12/2021	4	பௌர்ணமி / ப்ரதமை	ஞாயிறு	ம்ருகசீர்ஷம்	திருக்கச்சி நம்பிகள்	
20/12/2021	5	ப்ரதமை / த்விதீயை	திங்கள்	திருவாதிரை	ஸ்ரீராமானுஜர்	
21/12/2021	6	த்விதீயை	செவ்வாய்	புனர்வஸு	குலசேகர ஆழ்வார்	
22/12/2021	7	த்ருதீயை	புதன்	புஷ்யம்	திருமால்வடை	
23/12/2021	8	சதுர்த்தி	வியாழன்	ஆயில்யம்	திருமால்வடை	
24/12/2021	9	பஞ்சமி	வெள்ளி	மகம்	திருமழிசையாழ்வார்	
25/12/2021	10	ஷஷ்டி	சனி	பூரம்	ஆண்டாள்	
26/12/2021	11	ஸப்தமி	ஞாயிறு	உத்தரம்	தாயார்	
27/12/2021	12	அஷ்டமி	திங்கள்	ஹஸ்தம்	கூரத்தாழ்வான்	
28/12/2021	13	நவமி	செவ்வாய்	சித்திரை	மதுரகவியாழ்வார்	
29/12/2021	14	தசமி	புதன்	ஸ்வாதி	பெரியாழ்வார்	
30/12/2021	15	ஏகாதசி	வியாழன்	விசாகம்	நம்மாழ்வார்	
31/12/2021	16	த்வாதசி / த்ரயோதசி	வெள்ளி	அநுஷம்	ஸ்ரீமந்நாதமுனிகள்	
01/01/2022	17	சதுர்தசி	சனி	கேட்டை	தொண்டரடிப்பொடியாழ்வார் திருநக்ஷத்ரம் - மாலை பெருமாள், தொண்டரடிப்பொடியாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ S. ஸுதர்சனம்
02/01/2022	18	அமாவாசை	ஞாயிறு	மூலம்	ஹனுமத் ஜயந்தி, ஆஞ்ஜனேயர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம்	ஹனுமத் ஜெயந்தி - ஸ்ரீ V.K. சக்ரவர்த்தி ஐயங்கார்
03/01/2022	19	ப்ரதமை	திங்கள்	பூராடம்	பகல்பத்து உத்ஸவம் ஆரம்பம்	பகல்பத்து 10 நாளும் ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட்
04/01/2022	20	த்விதீயை	செவ்வாய்	உத்தராடம்	பகல்பத்து 2ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 1ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு, ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீ S .கோபாலன்

05/01/2022	21	த்ருதீயை	புதன்	ச்ரவணம்	பகல்பத்து 3ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 2ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீ R. ஸந்தான கிருஷ்ணன்
06/01/2022	22	சதுர்த்தி	வியாழன்	அவிட்டம்	பகல்பத்து 4ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 3ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு - ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீமுரளி ரங்கநாதன்
07/01/2022	23	பஞ்சமி	வெள்ளி	சதயம்	பகல்பத்து 5ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 4ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு - ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீ S. அருண்
08/01/2022	24	ஷஷ்டி	சனி	பூரட்டாதி	பகல்பத்து 6ம்நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 5ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு - ஆண்டாள் திருமஞ்சனம்	ஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீ P.V. பார்த்தஸாரதி குடும்பத்தினர்
09/01/2022	25	ஸப்தமி	ஞாயிறு	உத்தரட்டாதி	பகல்பத்து 7ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 6ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு - ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீமதி கீதா ஸ்ரீநிவாஸன்
10/01/2022	26	அஷ்டமி	திங்கள்	ரேவதி	பகல்பத்து 8ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 7ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு - ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீ கோபால்சாமி ஐயங்கார் பண்ட் - ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி
11/01/2022	27	நவமி	செவ்வாய்	அச்வினி	பகல்பத்து 9ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 8ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு - ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீ V.P. ப்ரேம்குமார்
12/01/2022	28	தசமி	புதன்	பரணி	பகல்பத்து 10ம் நாள் - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 9ம் நாள் - காலை - ஆண்டாள் புறப்பாடு ஆண்டாள் திருமஞ்சனம்	ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் - ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன்
13/01/2022	29	ஏகாதசி	வியாழன்	க்ருத்திகை	வைகுண்ட ஏகாதசி - காலை 4.30 - பரமபத வாசல் திறப்பு. பெருமாள், நம்மாழ்வார், தேசிகன் புறப்பாடு. ஆண்டாள் போகிப்பண்டிகை - காலை - ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 10ம் நாள் ஆண்டாள் புறப்பாடு - பெருமாள், ஆண்டாள் திருமஞ்சனம், மாலை - பெருமாள், ஆண்டாள், நம்மாழ்வார் புறப்பாடு - போகி திருக்கல்யாண உத்ஸவம் - இராப்பத்து 1ம் நாள் - திருவாய்மொழி தொடக்கம் - சேர்த்தி ஸேவை	இராப்பத்து 10 நாட்களும் ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட்

ஸ்ரீ:

14/01/2022	தை 1	த்வாதசி	வெள்ளி	ரோஹிணி	உத்தராயண புண்யகாலம் - காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம். இராப்பத்து 2ம் நாள் - மாலை - பெருமாள், தாயார், ஆண்டாள், நம்மாழ்வார் புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை. மாலை பொழுதுடன் திருவாராதனம்	உத்தராயண புண்யகாலம் - M/s. ஸுந்தரம் சாரிடீஸ்; தை வெள்ளிக்கிழமை உத்ஸவம் - ஸ்ரீ M.V. ஸந்தானம்

கோதா கிளிகண்ணி

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் எஸ். பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

1. வில்லிபுத்தூர் பூஞ்சோலையில்
விட்டுசித்தர் கண்டெடுக்க
சொல்லெடுக்க பூமித்தாயும் கிளியே
நல்லதொரு மகவானாள் கிளியே
சொல்லிடுநீ கோதாகோதா!

2. அந்தணரின் சிந்தைநின்ற
நந்தன்மகன் சரிதையதை
தந்தைசொலச் செலும்காலமே கிளியே
நந்தகோபன் சொந்தமென்பாள் கிளியே
விந்தையிவள் கோதாகோதா!

3. முளைத்ததும் மணமேகொள்ளும்
விளைதுளசி போலவே கோதை
இலைதுயில் கண்ணனையே கிளியே
முளையினில் காதல் கொண்டாள் கிளியே
திளைக்கவே கோதாகோதா!

4. குழலனுக் கழகிய மாலை
பழகியபட்டன் தொடுக்க
குழலியும் சூடித்தந்தாள் கிளியே
பழையவன் ஏற்றுக்கொண்டான் கிளியே
பிழைத்தனள் கோதாகோதா!

5. வேதமுச்சி கண்டகண்ணன்
பாதமதைச் சேர்வோமென்று
ஓதிநமை எழுப்பிடுவாள் கிளியே
கோதையும் கோபிகையாய் கிளியே
வேதமே கோதாகோதா!

6. வேள்வியில் அவியெனவே
ஆனவள் தானென்றாளே
கானிடை நரிக்கில்லைதான் கிளியே
ஆனிரை காப்பானுக்கே கிளியே
ஆனவள் கோதாகோதா!

7. ஏற்புடைக் கண்ணனவன்
காற்கடை நம்மைவைக்க
நூற்றிநாற்பத்து மூன்று கிளியே
சாற்றினாள் பாசுரமே கிளியே
கூற்றெலாம் கோதாகோதா!

8. இராமானுசன் நற்பொழுது
இராதிவள் சந்தையின்றி
இராதிவள் பாவென்றாலே கிளியே
இராதது மால்கோயிலே கிளியே
இராமானுசன் கோதாகோதா!

9. ஆராய்ந்திவள் சொன்னதிது
பாராயணம் செய்திடுவீர்
நாராயணனே நமக்கே கிளியே
சீராடிப் படிந்திடுவோம் கிளியே
வேராவாள் கோதாகோதா!

10. பூவுடன் பாவைக்கட்டி
தேவினை யாண்டாளவள்
மாவினுக் கடுத்தபடி கிளியே
மார்வினில் கலந்தாளடி கிளியே
சீர்மகள் கோதாகோதா!

11. எல்லாருக்கும் காமம்மாற்றும்
சொல்கோதையின் கிளிகண்ணியை
அடியார்க்கடியான் இட்டான் கிளியே
படிப்போர் பதம்சேர்வரே கிளியே
கொடுப்பது கோதாகோதா!

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

மற்றை நம் காமங்கள் மாற்று

ஸ்ரீ உ.வே. D. ராமஸ்வாமி ஐயங்கார், வைகுண்டவாஸீ

சொல்லின் செல்வியான ஆண்டாள், அவள் இன்னிசையால் பாடிக்கொடுத்த நற்பாமாலையாம் திருப்பாவையில், பல பல அருமையான கருத்துக்களை அமைத்து இருக்கிறாள். அவற்றுள் ஒன்று 'மற்றை நம் காமங்கள் மாற்று' என்ற சொற்றொடரில் பொதிந்துள்ள அழகான அருமையான அர்த்தவிசேஷம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திலேயே அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்காக வகுப்பப்பட்ட புருஷார்த்தங்களுக்குள் இன்பம் எனப்படும் காம புருஷார்த்தமே மேம்பட்டது. காமம் என்றவுடன் சிற்றின்பம் தான் முதன்முதலாக நினைவுக்குவருவது சஹஜம். அது அறவே அகற்றிவைக்க வேண்டிய தொன்று என்பதை நன்கு தெளியவேண்டும் முதல் முன்னம்.

'முந்துற உரைக்கேன் வீரைக்குழல் மடவார் கலவியை விடு' என்பது புலன் படிந்து உண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை ஒரு காலத்தில் வாளா போக்கின கலிகன்றி, எம்பெருமானால் மயர்வற மதிநலமருளப்பெற்று அவன் பக்கல் ஸர்வார்த்தக்ரஹணம் செய்த பிறகு நமக்கு அருளிச்செய்துப்போந்த நல்லுபதேசம்.

காமம் என்ற சொல் கேட்டவுடன் மந்தமதிகள் கலங்கிப்போய்விடுவார்களே என்ற பயத்தினால் நம்மிராமாநுசன் மிகுந்த கருணையோடு 'சீரிய நற்காமம்' என்று பகவத் காமத்துக்குப் பேரிட்டு 'கண்ணனுக்கேயாமது காமம்' என்றும் அறம் பொருள் வீடு இதற்கு (சீரிய நற்காமத்துக்கு) என்றும் உபதேசித்துப்போந்தார். இது திருவரங்கத்து அமுதனார் அருளிச்செய்த இராமாநுச நூற்றந்தாதிப் பாசுரமூலம் நாம் தெரிந்து கொள்ளும் உயர்ந்த பொருள். சீரிய காமமாதலால் சிற்றின்பத்துக்குச் சேராதது, நற்காமமாகையால் ஆத்மஹானி விளைவிக்காது. ஆத்மக்ஷேமத்தை அளிக்கவல்லது என்று பொருள் கொள்ளக்கிடக்கிறது.

'அன்பிலன்றி ஆழியானை யாவர் காணவல்லரே' என்பதுதான் பொதுவாக எல்லா ஆழ்வார்களுடைய சித்தாந்தமும். ஆயினும் அதைத் தன் வாழ்க்கையில் கடைபிடித்து வாழ்ந்தவள் ஆண்டாள் ஒருவளே. மற்ற ஆழ்வார்கள் தங்களது பக்தியைச் சிங்காரவடிவில் மாற்றிப் பாடவேண்டியவர்களானார்கள், ஆடவர் களாகப் பிறந்த படியாலே. ஆண்டாளுக்கோ திருமாலிடம் அவள் கொண்ட திருமாலே (காதலே) பக்தியாயமைந்தது. ஆதலால் அவள் 'மற்றை நம் காமங்கள் மாற்று' என்று பாடும்போது அதில் விசேஷார்த்தமிருக்கவேண்டும்.

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்' என்று உறுதியையும் தெளிவையும் தெரிவிக்கும் அழகிய சொற்கள் கொண்டு தன் முழு ஆசையையும் பேசி, அடுத்தபடியாக 'மற்றை நம் காமங்கள் மாற்று' என்று வேண்டுகிறாள். மற்றை நம் காமங்கள் என்ற சொற்களால் கீழ்ச்சொன்ன விருப்பத்தைத் தவிர மற்றை விருப்பங்கள் என்று பொருள் கொள்ளக் கிடக்கிறது. அவற்றைப் போக்கிவை என்று பாடாது மாற்று என்று பாடியிருக்கிறாள், 'எனது இதர மனோரதங்கள்' நசிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை .

அப்படிப் பிரார்த்தித்தவர் ஆளவந்தார் 'ப்ரசாந்தநிச்சேஷ மநோரதாந்தர:' என்பதாக. எம்பெருமானுடைய பக்தர்களுள் முதன்மை ஸ்தானம் வஹிக்கும் ப்ரஹ்லாதாழ்வான் ஆண்டாளுக்கு வழிகாட்டி யாயிருந்து 'மாற்று' என்று அவளைப் பாடவைத்திருக்க வேணுமென்று நினைக்கவிட மிருக்கிறது. அவர் சிங்கப்பிரானிடத்தில் செய்துகொண்ட வேண்டுகோள் பின்வருமாறு:-

யாப்ரீதி: அவிவேகாநாம் விஷயேஷு அநபாயிநீ |
த்வாம் அநுஸ்ஸ்ம ரத: ஸா மே ஹ்ருதயாத் மாபஸர்ப்பது||

'அவிவேகிகளான ஸம்ஸாரிகள் விஷயஸுகங்களில் அழியாத எந்த ஆசையை வைத்திருக்கிறார்களோ, அந்த ஆசையனைத்தும் உன்னையே இடைவிடாது தியானம் செய்யும் என்னுடைய மனதிலிருந்து அகலாதிருக்கவேண்டும்' இத்தால் ஸம்ஸாரி களுடைய விஷய ஆசையெல்லாம் எனக்கு ஏற்பட்டு அவையனைத்தும் உன்திறத்து ஆசையாக மாற வேண்டும் என்று பிரார்த்தித்தாராயிற்று பிரஹ்லாத ஆழ்வான்.

அதே அபிப்பிராயம் தோற்ற, மற்றை நம் காமங்களையெல்லாம் உன் திறத்துக் காமமாக மாற்றிக்கொடுக்கவேண்டும். அவைகளை அழித்து விடாதே. அவைகளின் லக்ஷ்யத்தை மட்டும் மாற்றி விஷயகாமமல்லாது பகவத்விஷய காமமாக மாற்றிக்கொடு என்று பொருள் கொள்வது உசிதம். இது அளவில்லா ஆசையைப் பரமபுருஷனிடத்தில் வைத்த ஆண்டாள் திருவாக்காகையால் ஆண் பிள்ளையான திவ்யகவியாம் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரே 'என்பாச நெஞ்சை மடைமாற்றி உன் சேவடிக்கே வரவைத்தருளே' என்று பாடியிருக்கிறாரே! ஆண்டாள் பாடுவதற்குக் கேட்கவேண்டுமா! ❊

ஸ்ரீ:



With Pranams:

Kimsuka Narasimhan,
S. Narasimhan and Pushpa Narasimhan,
N. Seshadri & Family
56, Alamelumangapuram, Mylapore,
Chennai 600 004.

SVDD thanks Kimsuka Narasimhan, S. Narasimhan and Pushpa Narasimhan, N. Seshadri & Family for sponsoring this month's issue of Desika Sandesam

திருக்கார்த்திகை தீபோத்ஸவம், கலியன் திருநக்ஷத்ரம்

திருக்கார்த்திகை தீபோத்ஸவம், கலியன் திருநக்ஷத்ரம்



கண்ணுக்கினியன

திருக்கார்த்திகை தீபோத்ஸவம், கலியன் திருநக்ஷத்ரம்



திருப்பாண் ஆழ்வார் திருநக்ஷத்ரம்

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

பஞ்சமி தீர்த்த உத்ஸவம்



பஞ்சமி தீர்த்த உத்ஸவம்

கண்ணுக்கினியன

பஞ்சமி தீர்த்த உத்ஸவம்

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

பஞ்சமி தீர்த்த உத்ஸவம்

ஸ்ரீ:

விருந்தாவனத்தே கண்டோமே

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

த்ரேதா யுகத்தில் விதேஹ தேசத்தில் மிதிலாபுரியில் ஜனகன் கண்டெடுத்த பொக்கிஷம் சீதாபிராட்டி. கலியுகத்தில் பாண்டிய தேசத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் கண்டெடுத்த பொக்கிஷம் கோதாபிராட்டி. விஷ்ணுசித்தர் வடபத்ரனுக்குத் தொடுத்த அழகிய புஷ்பமாலையினைத் தானணிந்து தன் நாயகனுக்கு அனுப்புவாள் கோதை. தன்பால் பெருவேட்கைக் கொண்டவள் சூடிக் கொடுத்த புஷ்ப மாலையினை அவளது நாதனும் பெரும் உவப்போடு நித்தம் அணிந்து கொள்ள, அவர்களிடையே இந்த ரஹஸ்ய பரிமாற்றம் நிகழ்ந்தவாறு இருந்தது.

இதனை அறிந்த போதில் மேலும் அபசாரப்பட வேண்டாமென்று, அவள் சாற்றிக் கொண்ட அந்த புஷ்ப மாலையினை ஆலிலைத் துயில்வோனுக்கு ஆழ்வார் சாற்றாதிருக்க, ரஹஸ்ய பரிமாற்றத்தினால் உகந்திருந்தவன் வாட்டமுற்றான். தனது வாட்டத்தினை மண்மகளாம் கோதையின் தந்தை பெரியாழ்வாருக்கு ஸ்வப்பனத்தில் தெரியப்படுத்த, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியானாள் கோதை. ப்ரபந்ந குலத்தில் அவதரித்திருந்தும், தனது ப்ரயத்னங்களினால் அந்தப் பரமாத்மனை அடைய யத்தனிக்கிறாள்.

எம்பெருமானை அடைவதற்கென அவள் மேற்கொண்ட ப்ரயத்னங்களில் பதினான்கு நிலைகளாக அவளது பக்தி ஸேவையாகும். நாச்சியாரின் திருமொழியாகும் இந்த விலக்ஷணமான அருளிச்செயல்களில் பதினான்காவது தசகத்தில் விருந்தாவனத்தே கண்ணனைக் கண்டீரா என்று இவள் கேட்பதும், ஆஹா கண்டோமே என்று அவளே பதில் சொல்வதும் ஸ்வாரஸ்யம்.

நாச்சியார் திருமொழியில் பதினான்காம் தசகத்தின் முதல் பாசுரத்தினை மேலோட்டமாகப் பார்த்தால் விருந்தாவனத்தே ஸ்ரீக்ருஷ்ணன் விளையாடுவதைக் கூறும் பாசுரம் என்று தோன்றும். சிறிது ஆழ்ந்து நோக்குவோம்.

பட்டி மேய்ந்த பரந்தாமன்

‘பட்டி மேய்ந்தோர் காரேறு பலதேவற்கு ஓர் கீழ்க்கன்றாய்
இட்டீறிட்டு விளையாடி இங்கே இட்டமான பசுக்களை
இனிது மறித்து நீரூட்டி விட்டுக் கொண்டு விளையாட’

திருவனந்தாழ்வான் ஆஸனமாக, ஸேனை முதலியானின் காவலிலே, ஸூபர்ணனின் அகன்ற சிறகுகளின் கீழே அடைபட்டு வர்த்திப்பது ஸுகிக்காமல் எம்பெருமான் திருவாயர்பாடிக்கு

வந்தான். திருவாயர்பாடி அடைந்தவன் யானை கருப்பந் தோட்டத்தில் புகுந்ததுபோலே ‘பட்டி மேய்ந்தான்’ என்கிறாள். அதாவது, என்னைத் தடுப்பார் எவருளர் (ஸர்வசக்தித்வம்) எனும்படியாக இன்னவிடம் தான் என்றில்லாது எங்கும் (ஸர்வ வ்யாபித்வம்) விளையாடித் திரிந்தானாம்.

“பலதேவற்கு ஓர் கீழ்க்கன்றாய்” என்றுரைத்து, அந்தப் பொல்லாதவன் தனது தமையனாம் பலதேவர் அருகில் இருக்கும் போது மட்டும் பவ்யமே திருவுருவாக இருப்பவன் என்று எள்ளி நகையாடுகிறாள் கோதை நாச்சியார்.

க்ஷீராப்திநாதனாம் எம்பெருமான் ஓரிடத்திலேயே இருக்கவொண்ணாது, ஜலத்தினையும் பசும் புல்லினையும் தேடும் வ்யாஜத்தில் தான் ப்ரீதி கொண்ட கோகூட்டத்தினை மேய்ச்சலுக்குக் கூட்டிச் சென்று விளையாடிக் களிப்பதைக் கண்டோம் என்கிறாள். அவனை நினைத்து தான் இங்கு நோவுற்றிருக்க, அவனோ பலவாறு ஸந்தோஷித்துக் கொண்டிருக்கிறான் (ஸ்வாதந்த்ரியம்) என்ற நாச்சியாரின் அங்கலாய்ப்பு இங்கு நன்கு ஸேவையாகும்.

ஆயர்பாடி கவர்ந்த கோவர்தனன்

‘அனுங்கவென்னைப் பிரிவு செய்து ஆயர் பாடி கவர்ந்துண்ணும்
குணுங்கு நாறிக் குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே’’

இரண்டாம் பாசுரத்தில் **‘ஆயர் பாடி கவர்ந்து’** எனும் பதங்கள் ஆழ்ந்த பொருளுடையவை. தன்னைக் கூடாது பிரிந்து வாட்டமுறச் செய்த கோவர்தனன் மிகவும் பொல்லாதவன். தன்னை மட்டுமல்லாது இந்த ஆயர்பாடியையே தனது கள்ளத்தனத்தினால் கவர்ந்திருப்பவன் என்கிறாள். இன்னின்னார்தான் என்றில்லாது, ஸாமாந்யம் அதிதைவதம் எனும்படியாக,

அனைவரையும் ஆட்கொள்ளும் மாயாவியைக் கண்டீரோ என்பது கேள்வியாக, **'கணங்களோடு',** அதாவது திருக்குழலினால் கோகூட்டத்தினையும் திருவாயர்பாடி பெண்டிரையும் தனது போக்ய பதார்த்தங்களாய் கொண்டுள்ளவனைக் கண்டோம் என்பது பதிலானது.

ஏலாப் பொய்யுரைக்கும் மணாளன்

'மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை
ஏலாப் பொய்கள் உரைப்பானை இங்கே போதக் கண்டீரே?''

மூன்றாம் பாசுரத்தில், பெண்டிர் மேல் உண்டான வ்யாமோஹத்தினால் ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்ததோடு, வ்யாமோஹத்தினை மட்டுமே தலையாய கடமையாகச் செய்பவனை எவரேனும் கண்டீரோ என்கிறாள். தனது வ்யாமோஹ சேஷ்டிதங்களுக்கு பங்கம் நேராதிருக்க **'ஏலாப் பொய்கள் உரைப்பான்'** என்றுரைத்து அவனைப் பொய்யன் என்கிறாள். இவ்விடம் 'ஏலாப் (ஏலா – இயலா – ஸாத்தியமில்லாத) **பொய்கள்''** என்று கோதை கூறுவதன் காரணத்தை அழகிய வ்ருத்தாந்தம் ஒன்றில் அந்வயித்து அறியலாம்.

ஒருமுறை, ஸ்ரீக்ருஷ்ணன் புரியும் ஹிம்ஸைகள் பொறுக்காது, அவனது க்ருஹத்தின் அருகே தங்கள் க்ருஹம் அமையப் பெற்ற கோபியர் பலர், தங்களது க்ருஹத்திலுள்ள பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றைக் காபந்து பண்ணிக் கொள்ளும் பொருட்டு அவை அனைத்தையும் (ஸர்வ வ்யாபியான) அவன் கண்காணாத இடத்தில் ஒளித்து வைத்தனர். வெண்ணெய் உண்ணும் ஆசையில் ஸ்ரீக்ருஷ்ணனும் சிறிது தொலைவில் இருந்த ஆய்ச்சி ஒருத்தியின் க்ருஹத்தினுள் நுழைந்து, உறியினில் தொங்கிய வெண்ணெயைப் பானையுள் தனது திருக்கரத்தினை நுழைத்து வெண்ணெயை எடுக்க முயலும் பொழுதில், அந்த க்ருஹத்தின் பெண்ணானவள் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டாள்.

'இங்கு எதற்கு வந்தாய்?' என்று அப்பெண் வினவ, எனது க்ருஹம் என்று நினைத்து நுழைந்துவிட்டேன் தாயே என்கிறான் அந்தப் பொய்யன். 'வெண்ணெய்ப் பானைக்குள் கை நுழைத்து என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று அவள் கேட்க, **என் தாய் யசோதை** எங்களது கன்றுக் குட்டி ஒன்று காணவில்லை என்றாள். அதனை வெண்ணெய்ப் பானைக்குள் தேடிக் கொண்டிருந்தேன் என்கிறான் **'ஏலாப் பொய்கள் உரைப்பான்'.** இதனைச் செவியுற்ற அந்தப் பெண்ணோ தலை சுற்றி விதிர்விதிர்த்து நின்றாள். தென்னை மரத்தின் மீதேறியது புல் பிடுங்குவதற்கு என்கிறானே இந்தச் சிறுவன் என்று, அவனது புரட்டினைக் கேட்டுக் கோபமுற்று, தாம்புக் கயிற்றினால் அவனைக் கட்டி, பிரம்பினால் அடிக்க முயல, திருவாயர்ப்பாடியே அதிருமாப் போலே குரல் உயர்த்தி மாய்மாலம் பண்ணுகிறான் அந்த அழகிய கள்வன். இவன் கூக்குரல் யசோதையின் செவிகளில் விழுமானால் சபிப்பாளே என்றஞ்சி, சென்று வா குழந்தாய் என்று ஒரு பானை வெண்ணையினை அவனது கையில் கொடுத்து வழியனுப்பி வைத்தாளாம் அந்த ஆயர்பாடிவாஸி.

தன்னைக் காத்துக் கொள்வது எப்படி என்று ஒரு நொடிப்பொழுதில் யோசித்து **தான் யசோதை மைந்தன்** என்று அடையாளப்படுத்திக் கொள்கிறான் அனைத்தும் அறிந்த அந்த சாதுர்யன். அண்ட சராசரங்களையும் ரக்ஷிப்பவனை இப்படிப் பல ப்ரகரணங்களில் காப்பாற்றுவதற்கு என்ன தவம் செய்தனை யசோதா!

கோதை காட்டும் ஆகிஞ்சன்யம்

''கார்த்தண் கமலக்கண் என்னும் நெடுங்கயிறு படுத்தி என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே?''

வான் முகில்களினூடே மனங்கவர் தாமரைப் பூக்கள் இரண்டு பூத்தனவோ எனும்படியான ப்ரகாசமிக்க அழகிய திருக்கண்களைத் தூண்டிலாக்கி, தான் செல்லுமிடமெங்கும் எனது ஹ்ருதயத்தினையும் கவர்ந்து செல்லுபவனைக் கண்டீரா என்று அவனது கண்ணழகினை நான்காம் பாசுரத்தில் வர்ணிக்கிறாள்.

நான்காம் பாசுரத்தில் அவனது நேத்ரங்களின் அழகில் லயிக்கும் கோதை, ஐந்தாம் பாசுரத்தில் அவனது குணாதிசயங்களை விளக்குகிறாள். **'மாதவன் என் மணியினை வலையில் பிழைத்த பன்றிபோல்'** — தனது நேத்ரங்களின் அழகினால் என்னைத் தன் வலையில் வீழ்த்தியவனை எவரால் தான் தமது வலையினுள் அடைப்பிக்க முடியும் என்று அங்கலாய்த்து, அந்தப் பரிபூர்ணனின் பராக்ரமத்திற்குக் கட்டியம் கூறுகிறாள். **'பீதக வாடை உடை தாழப் பெருங் கார்மேகக் கன்றே போல்'** என்றதன் மூலம், கருத்த மேகத்தின் நிறத்தினையொத்த கண்ணன் பீதாம்பரப்ரியன் என்பதை நிஷ்கர்ஷிக்கிறாள்.

தருமம் அறியாத குறும்பன்

'தரும மறியாக் குறும்பனைத் தன்கைச் சார்ங்கமதுவே போல்
புருவ வட்டம் அழகிய பொருத்தமிலியைக் கண்டீரே''

ஸ்ரீராமன் தன் திருக்கரத்தினில் ஏந்திய சார்ங்கத் தினைப் போன்று வளைந்த புருவங்கள் அந்த அழகனுக்கு இருந்து என்ன ப்ரயோஜனம்? தனதழகை ரசிப்பவருடன் பொருந்தி ஒட்டாத காருண்யமற்ற அதர்மிஷ்டன் அவன் என்கிறாள் ஆறாம் பாசுரத்தில். தன்னுடன் அவன் கூடாததனால் அவன் மீது அவள் கொண்ட கோபத்தினையும் மீறி அவன்பால் அவள் கொண்டிருந்த ப்ரேமை வெளிப்படும் அழகிய பாசுரம் இது.

'பொருத்தமுடைய நம்பியைப்
புறம் போல் உள்ளும் கரியானை'

ஆறாம் பாசுரத்தில் **''பொறுத்தமிலி''** என்று ஸ்ரீக்ருஷ்ணனை சாடியவள், ஏழாம் பாசுரத்தில் **''பொருத்தமுடைய நம்பி''** என்கிறாள். இதற்கு விளக்கமாக **'புறம் போல் உள்ளும் கரியானை'** என்ற பதங்கள் அமைகிறது. ''மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம்'' — மனோவாக்காய த்ருடத்துடன் இருப்பதே மேலையார் குணம் என்பதை நிஷ்கர்ஷம் பண்ணும் கீதாவசனம் இது. (அடையப்பட வேண்டிய ப்ராப்யம் ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளே என்பது மனோவாக்காய ஆச்ரிதர்கள் கொள்ள வேண்டிய த்ருடம்). இங்கு கருமை என்பதைக் கண் காணும் நிறம் என்று கொள்ளலாகாது. **'கரியானை'** என்பது உள்ளும் புறமும் மாயாவியாக இருப்பவன் எனும் குணத்தினைக் குறிக்கும் பதமாகிறது. அதாவது, புறத்தே மனதிற்கு இதம் அளிப்பவனாக இருப்பதனால், அவனது ஹ்ருதயமும் இதம் அளிப்பதாகவே இருக்கும் எனும்படியான விபரீத லக்ஷணம்.

எட்டாம் பாசுரத்தில் **'வெளிய சங்கொன்று உடையானைப் பீதகவாடை உடையானை'** என்று கூறி அந்தக் பாஞ்ச ஜன்யமேந்தியவன் பீதக ஆடை ப்ரியன் என்பதை மற்றொருமுறை நிஷ்கர்ஷம் பண்ணுகிறாள். **'களிவண்டெங்கும் கலந்தாற்போல் கழம்பூங்குழல்கள் தடந்தோள்மேல் மிளிர நின்று விளையாடுபவன்'** என்று வர்ணித்து, அந்தத் திருமகள்கொழுநன் தோள்மேல் சுருள்சுருளாகப் புரண்டு விளையாடும் கருமைநிறக் கூந்தல் அழகில் தன்னிலை மறக்கிறாள்.

'நாட்டைப் படையென்று அயன் முதலாத் தந்த நளிர் மாமலருந்தி வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன்'' என்று எம்பெருமானின் ஸ்ருஷ்டி ஸ்திதி லயம் ஆகியவற்றைக் கொண்டாடுகிறது இந்த ஒன்பதாவது பாசுரம். இத்தகைய பரமபாவனனான எம்பெருமான், **'தேனுகன், களிறு, புள்'** — தேனுகாசுரன், குவலையாபீடம் எனும் யானை, பகாஸுரன் ஆகியோரை ஒரு க்ஷணத்தில் வதம் செய்தவன் என்று அவனது பராக்ரமம் பேசுகிறாள்.

மாம் ஏகம் சரணம் வ்ரஜ

'பருந்தாட்களிற்றுக்கு அருள்செய்த பரமன் தன்னை பாரின்மேல் விருந்தாவனத்தே கண்டமை' என்று வரும் கடைசி பாசுரத்தில், அவளது ப்ராணனாய் இருப்பவனை விருந்தாவனத்தே கண்டதாகக் கூறாமல் கஜேந்த்ரமோக்ஷ வ்ருத்தாந்தத்தினை கோதை அநுஸந்திக்கிறாள்.

துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்து துணை ஆவர் என்றே ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன் ஆனைக்கு நீ அருள் செய்தமையால் — எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன் — அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் என்று அரங்கத்தரவணைப் பள்ளியானைக் கொண்டாடியவர் பெரியாழ்வார். மேலையார் செய்வனகள் செய்ய வேண்டுமென உரைத்த ஸ்ரீஆண்டாள், பெரியாழ்வாரின் அடியொற்றி ''உன் ஒருவனையே சரணடைந்தேன் ஆதிமூலமே'' என்கிறாள்.

ஸ்வரூப வ்ருத்திக்கென நாச்சியார் அநுஸந்தித்த ப்ராப்ய (அடைய வேண்டியது) ப்ராபகங்களை (வழிமுறைகள்) மனதிற்கொண்டு, கோதையின் ஆசைக் கிளி போல (கூட்டிலிருந்து கிளியெப்போதும் கோவிந்தா கோவிந்தா என்றழைக்கும்) நாமும் எப்போதும் கோவிந்த நாமம் ஸ்மரித்து அந்த பக்தபராதீனன் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் பண்ணுவோம்!

மார்கழியில் முக்கிய உத்ஸவங்கள்

தநுர்மாஸ ஆராதனம் ஆரம்பம் டிஸம்பர் 16 (வியாழன்)
திருப்பாவை உபந்யாஸம் மாலை **(மார்கழி மாதம் முழுவதும்)** டிஸம்பர் 15 (புதன்) முதல் ஜனவரி 13 (வியாழன்) வரை
தொண்டரடிப்பொடி ஆழ்வார் சாற்றுமுறை ஜனவரி 1 (சனி)
ஹனுமத் ஜயந்தி ஜனவரி 2 (ஞாயிறு)
பகல்பத்து ஜனவரி 3 (திங்கள்) முதல் ஜனவரி 12 (புதன்) வரை
ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் ஜனவரி 4 (செவ்வாய்) முதல் ஜனவரி 13 (வியாழன்) வரை
கூடாரைவல்லி - 100 தடா உத்ஸவம் ஜனவரி 11 (செவ்வாய்)
வைகுண்ட ஏகாதசி, **போகி திருக்கல்யாண உத்ஸவம்** ஜனவரி 13 (வியாழன்)
இராப்பத்து **ஜனவரி 13 (வியாழன்) முதல்** ஜனவரி 22 (சனி) வரை
தை வருஷப்பிறப்பு, ஸங்க்ராந்தி ஜனவரி 14 (வெள்ளி)

ஸ்ரீ:

அருள்கொண்டாடும் நம் ஆசார்யன்

ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

ச்ரிய:பதியான ஸர்வேச்வரனின் ஸம்பந்தம் பெற்றதால் ஏற்றம் பெற்ற பல விஷயங்கள் உண்டு. ஆனால் எம்பெருமானே ஏற்றம்பெறுவது அவனுடைய திருக்கல்யாண குணங்களாலேயே! குறிப்பாக தயை என்னும் குணம் காரணமாகவே இவனுடைய பெருமை அளவிடற்கரியதாகிறது என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

ச்ருதப்ரகாசிகையில் ஒரு ச்லோகம்:

''ஸங்க்யாதும் நைவசக்யந்தே குணாதோஷாஸ்ச சார்ங்கிணி ஆநந்த்யாத் ப்ரதமோ ராசி: அபாவாதேவ பஸ்சிம:''

எம்பெருமானின் குணங்களையோ தோஷங்களையோ எண்ணமுடியாது என்று வேடிக்கையாகக் கூறுகிறது.

திருக்கல்யாணகுணங்கள் அனந்தமானவை என்பதால் அவற்றை எண்ண முடியாது. அதே சமயத்தில் அவனிடம் தோஷம் என்பது ஒன்றுகூட இல்லாதபோது எப்படி எண்ணமுடியும்? இதையே உபநிஷத்துகள் உபயலிங்கம் என்று போற்றுகின்றன. எண்ணற்ற கல்யாண குணங்கள் உடையவன், தோஷமற்றவன் (ஹேயப்ரதிபடன்) என்னும் இரண்டும் இவனுக்கு அடையாளங்கள் என்கின்றன.

இவனுடைய திருக்கல்யாண குணங்களை இரண்டாகப் பிரிக்கலாம். இவனே ஸர்வேச்வரன் என்று காட்டும் ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், மோக்ஷப்ரதத்வம் முதலியவை ஒருவகை. அடுத்த வகையான ஸௌலப்யம், ஸௌசீல்யம், வாத்ஸல்யம் முதலிய குணங்கள் இவனுடைய எளிமையைக் காட்டிக்கொடுப்பதுடன் இவனே சரண்யன் என்பதையும் பறைசாற்றுபவை.

ஸ்ரீமத் ரஹஸ்ய-த்ரய ஸாரத்தில் சரமச்லோக அதிகாரத்தில் ஸ்வாமி தேசிகன் இதைத் தெளிவாக அருளிச் செய்கிறார், சரண்ய குணங்களில் ஆச்ரிதர்களின் ஸம்ரக்ஷணத்துக்குப் ப்ரதான குணம் இதுவே என்று அங்கே காருண்யத்தைக் காட்டியருளுகிறார். காருண்யமும் இதன் சுவடுகளான (பிரிவுகளான) ஸௌஸீல்ய வாத்ஸல்யாதிகளும் அனுக்ரஹத்துக்கு ஏகாந்திகள் (முக்கிய காரணங்கள்) என்று தாமே அருளிச் செய்துள்ளார். மேலும் ''தேவாதி தேவனே! நான் உன்னை அர்ச்சிப்பதற்கோ துதிப்பதற்கோ சக்தியற்றவன். கருணை ஒன்றையே மனதில் கொண்டு நீ என்மீது அருள்புரியவேண்டும்'' என்னும் பொருள்படும் 'ஸோஹம் தே' எனத் தொடங்கும் ஸ்ரீவிஷ்ணுபுராண ச்லோகத்தையும் எடுத்துக் காட்டுகிறார்.

மேலும் உன் திருவருளாலன்றி காப்பது அரிது, நின் அருளே புரிந்திருந்தேன், உனது அருளே பார்ப்பன் அடியேன்

என்றும் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகள் பலவற்றையும் ஸ்வாமி இவ்விடத்தில் எடுத்துரைக்கிறார். **குளிரருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி** என்ற கோதையின் திருவாக்கிற்கிணங்க திருமலையப்பனின் குணத்தைக் கொண்டாடி ஒரு சதகம் அருளிச் செய்கிறார்.

தயா சதகம் – ஒரு அமுத ஆறு

கருணை, அன்பு, தயை, இரக்கம் என்பவையெல்லாம் பிராட்டிக்கே உள்ள குணங்கள் என்று பலராலும் போற்றப் பெறுகின்றன. ஸ்ரீஸ்துதியில் **ஸ்வாமி தேசிகன் ஸாநுப்ராஸ ப்ரகடித தயை:** என்பதாக அதாவது தாயாரின் திருக்கண் கடாக்ஷத்திலிருந்து தயை அடிக்கடி வெளிப்படுகிறது என்றும், தயை நிறைந்த அவளுடைய கடாக்ஷங்கள் என்றும் போற்றுகிறார். **நின் அருளெனும் சீர் ஓர் அரிவை ஆனதென** என்று பெருமாளின் திருமார்பில் எழுந்தருளியிருக்கும் பிராட்டியை அருளே வடிவெடுத்த அரிவை (இளம் பெண்) என்று காட்டியருளுகிறார்.

பெருமாளின் திருவுள்ளத்திலும் தயையாகிற இந்த **அமுத ஆறு** பெருகி வந்து ஜீவர்களை ரக்ஷிப்பதாக ஸ்ரீதயாசதகம் என்னும் ஸ்தோத்ரத்தில் 108 ச்லோகங்கள் கொண்டு விரிவாக அருளிச் செய்திருப்பது அடியார்களுக்கு இவர் படைக்கும் மற்றுமோர் அமுத ஆறு எனலாம்!

இதனாலேயே **அருள்கொண்டாடும் அடியவர் என்று ஸ்ரீமதுரகவிகள் ஸ்வாமி தேசிகனையே ஸூசிப்பதாக ஆன்றோர் அருளுவர்.** எம்பெருமானின் அருளை, தயை என்னும் குணத்தையே முன்னிறுத்தி ஒரு ஸ்தோத்ர க்ரந்தம் அருளிச் செய்தது இவ்வாசார்யனையன்றி மற்றொருவர் உண்டோ? பாதுகாதேவியின் அருளைக் கொண்டாடி ஒரு யாமத்தில் ஓராயிரம் பாடவல்ல இவரால் நம்மைப் பாதுகாத்திடும் தயை என்னும் இத்தாயைப் போற்றி பல்லாயிரமாகப் பாடவியலும் என்றபோதும் 108 ச்லோகங்களிலேயே அவ்வருளின் பெருமைகளை நிற்கப்பாடி நம் நெஞ்சுள் நிறுத்துகிறார் ஸ்வாமி!

தசகமும் சதகமும்

அருள்கொண்டாடும் அடியவர் இன்புற அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ்பாடிய நம்மாழ்வாரின் திருவுள்ளக்கருத்தையே தம் உள்ளத்தில் கொண்டு நூறாகப் பாடி இத்துதியை அருளினார் எனலாம். ஆழ்வாரின் ஒரு சதகம் (100 பாசுரங்கள்) இங்கே ஒரு தசகம் (10 ச்லோகங்கள்) ஆயிற்று. இவ்வாறு பத்து பத்துக்களில் ஆழ்வார் அமைத்துள்ள ஸாரார்த்தங்களை தயா சதகத்தில் பத்து தசகங்களிலும் அமைத்துள்ளார் என்று கூறலாம்படி உள்ளதாக த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி, த்ரமிடோபநிஷத் ஸாரம் ஆகிய நூல்களில் ஸ்வாமிதேசிகன் அருளியுள்ளதைக் கொண்டு பெரியோர் கூறுவர்.

திருவாய்மொழியில் ஆழ்வார் ஆயிரத்தில் காட்டும் பத்து திருக்கல்யாண குணங்களை இவர் நூறு ச்லோகங்களில் அமைத்து அவற்றை வெவ்வேறு கோணங்களில் வெவ்வேறு விருத்தங்களில் வெவ்வேறு ரஸங்களுடன் எடுத்துக்காட்டுவது ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து அனுபவித்து இன்புற வேண்டிய அரியதொன்றாகும்.

உதாரணமாக ஆறாம் பத்தில் ஆழ்வார் எம்பெருமானை ப்ரபத்திக்கு எளியவன், (ப்ரபதன ஸுலபன்) என்று நூறு பாசுரங்களில் பாடி தாம் அப்பெருமானுடைய குறிப்பாக திருவேங்கடமுடையானின் திருவடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் என்று அருளிச் செய்கிறார். ஸ்வாமியும் தயா சதகத்தின் ஆறாம் தசகத்தில் திருவேங்கடநாதனின் திருவருளாகிய தயா தேவியையே சரணமாகப் பற்றி அவள் அடிக்கீழ் தாம் அமர்ந்து புகுந்ததைப் பாடி உபாயமும் உபேயமும் இப்பெருமானே என்று வலியுறுத்துவதைக் காணலாம்.

இங்கு மற்றோர் அம்சமும் குறிப்பிடத்தக்கதாகும். ஆழ்வார் முதல் பத்தில் ஸேவா யோக்யன், ஸேவிக்கத் தகுந்தவன் எம்பெருமானே என்பதை நூறு பாசுரங்களால் வெளியிடுகிறார். ஆனால் தேசிகனோ நம்மால் வணங்கப்பட வேண்டியவர்கள் எம்பெருமான் மட்டுமின்றி இன்னும் பலருண்டு என்று தம் முதல் தசகத்தில் காட்டுவது மிக அருமை. ஆழ்வார், எம்பெருமானால் மயர்வற மதி நலம் அருளப் பெற்று அந்த ஜ்ஞானம் கொண்டு பாடினார், ஸம்ஸாரிகளான நாமோ இந்த ஜ்ஞானத்தைப் பெறுவது ஆசார்யர்களிடமிருந்தேயன்றோ! எனவே நாம் ஜ்ஞானம் பெறக் காரணமாயுள்ள அனைவரையும் வரிசைப்படுத்தி பத்து ச்லோகங்களை அருளுகிறார் தம் முதல் தசகத்தில்!

முதலில் திருமலையை வணங்குகிறார். இம்மலை யானது ஆழ்வார் தம் முதல் பாசுரத்திலேயே துதிக்கும் 'துயரறு சுடரடியை எமக்குக் காட்டும் வெற்பு' அன்றோ! இதைத் தொடர்ந்து ஒன்பது ச்லோகங்களிலும் முறையே நம் ஆசார்ய பரம்பரை, ஆழ்வார்கள், ரிஷிகள், விஷ்வக்ஸேனர், பெரியபிராட்டியார், மற்றும் பூமி, நீளா தேவியர் என இவர்களைத் துதித்தபின் ஒன்பதில் கருணைக் கடலான எம்பெருமான் ஸ்ரீநிவாஸனையும் பத்தாவது ச்லோகத்தில் தயாசதகம் என்னும் இவ்வற்புதமான காவியத்தின் நாயகியாகிய தயாதேவியையும் துதித்து நம்மால் வணங்கப்பட வேண்டியவர்களை இங்ஙனம் வரிசையாகக் காட்டியபின் ஸ்தோத்திரத்தைத் தொடங்குவது இணையற்றவொன்றாகும்.

தொடக்கமும் முடிவும்

திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே என்று ஆழ்வார் அருளியதற்கிணங்க ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: என்று முதலில் திருமலையை வணங்கியதுடன் இந்நூல் ப்ரபத்தியை வலியுறுத்தும் படைப்பு என்பதைக் குறிக்குமுகமாக முதற்சொல்லை அமைத்திருப்பதும் ஓர் அழகு!

தயாதேவியென்னும் பேரரசியின் கோலாஹலமான ஊர்வலத்துடன் மங்களகரமான தொடக்கம் ச்லோகம் 11ல்! நாயகனாகிய ஸ்ரீநிவாஸனும் இவளுக்கு வசப்பட்டு உடன் வருகிறார்! ஆறு குணங்களில் ஜ்ஞானம் என்னும் குணம் முன்னால் சென்று ஜய ஜய என்று கட்டியம் கூறியபடி தீபம் காட்ட மற்ற ஐந்து குணங்களும் இவர்களைப் பின்தொடர இப்படி ஒரு அழகான ஊர்வலத்துடன் ஸ்துதி தொடங்குகிறது. மேலே அவதரிக்கும் ச்லோகங்களும் ஊர்வலமாக வெவ்வேறு ரஸங்களுடனும், விருத்தங்களுடனும், காட்சிகளுடனும் நிறைவை சென்றடைகிறது. 108-ம் ச்லோகமும் திருமலைவாழ் திவ்ய தம்பதிகளின் தயா பெருக்கான அலைகளின் கோலாஹலமான முழக்கத்துடன் நூலை நிறைவு செய்கிறது!

சீர் கலந்த சொல் (கல்யாண குணத்தைப் போற்றும் ஸ்துதி)

பல அற்புதமான கருத்துகளை ஸ்வாமி தேசிகன் இந்த ஸ்துதியில் தாம் ஒரு கவிஸிம்ஹம் என்பதை நிரூபிக்கும் வகையில் அருளிச் செய்துள்ளார். நம்மை ரக்ஷிக்கும் மூலிகை அஞ்சன கிரிநாதனின் ரஞ்சனியாகிய இவளே என்றும், நம் பாவக்

கூட்டங்களை தயையென்னும் இப்பெருவெள்ளம் அடித்துச் சென்றுவிடுமென்றும், இந்த அருளென்னும் அன்னைக்குத் தாம் அபராதங்களையே காணிக்கையாகப் படைத்தபோதும் அதையும் ஏற்றுக் கொண்டு அன்புடன் அருள்புரிகிறாள் என்றும், ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கும் பவித்ரமான படகு இவளே என்றும், ப்ரபந்நர்களின் குற்றங்களைக் கணிசியாமல் மன்னித்து அருள வேண்டும் எனத் திறம்பட வாதித்து நம்மை சிறையிலிருந்து விடுவித்து பெருமாளின் திருவடிகளில் ஒப்படைக்கிறாள் என்றும், நல்லவற்றை நாடாமல் விலகி ஓடும் நம்மைப் பிடிக்கும் வலிமிகு வலை இவளே என்றும், சாஸ்த்ரமாகிய ஜ்ஞானக்கை கொடுத்து நம்மை மீட்பவளும் இவளே என்றும், அக்கரை எனப்படும் மோக்ஷத்தில் கொண்டு சேர்க்கும் அழகிய அழியாத தர்ம ஸேது (அணை) மற்றும் புனித கங்கையும் இவளே என்றும் பலபடியாகப் போற்றுகிறார்.

எம்பெருமானையும் மேடுபள்ளம் பாராது பெருகும் வெள்ளமாக்கி வேடுவன், வானரம் என்று அடியார்களிடம் பேதம் ஏதும் பாராமல் எல்லோருக்கும் அருள்புரியும்படி செய்பவள் என்றும் மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்களெடுத்து அவனியை ரக்ஷிக்குபடி தூண்டியவளே இவள்தான் என்றும் புகழ்கிறார். பகவானின் கட்டளையாகிய சாஸ்த்ரங்களை மறுத்துத் திரிந்து அதனால் மாறி மாறி பல பிறப்பும் பிறந்து அல்லலுறும் நமக்கு ப்ரபத்தியென்னும் மார்க்கத்தைக் காட்டியருளுவதுடன் அதில் நம்மை செலுத்துபவளும் இவளே என்றும் அருளிச் செய்கிறார். உபாயமும் உபேயமுமாகி நிற்பவள் தயாதேவியே என்கிறார். ஆக, எம்பெருமானின் திருவுள்ளத்தில் ப்ரவஹிக்கும் தயை என்னும் குணத்தைப் பாடுவதாக ஸ்வாமி திருமலை எம்பெருமானையே இவ்விதம் அற்புதமாக அனைத்து ச்லோகங்களிலும் துதிக்கிறார்.

நூறாவது ச்லோகத்தில் உலகுக்கே தாயாய் விளங்கும் தயாதேவியே! என அழைத்து தன் ப்ரார்த்தனையை வெளியிடுவது அழகு! முகுந்தன் என்னும் தன் திருநாமத்திற்கேற்ப பின்னாளில் மோக்ஷம் தருவதோடு நில்லாமல் அடியேனிடம் ஆதரம் பெருகி அந்த மோக்ஷானுபவத்தை இங்கு தன் திருவடிகளிலேயே அடியேனுக்குத் தந்தருளும்படி நீயே செய்யவேண்டும் என்ற ப்ரார்த்தனையுடன் ஸ்தோத்ரத்தை முடிக்கிறார்.

தயைக்கு நூறு எனத் தலைப்பிட்டிருந்தபோதும் பரீவாஹம் என்பதுபோல் வழிந்தோடும் அமுதப் பெருக்காக ஆசார்யனும் மேலும் எட்டு ச்லோகங்களை அருளிச் செய்கிறார், இதில் அளவற்ற இவளுடைய கருணையை நூறில் அடக்கிய தன் துணிச்சலான செயலையும் வால்மீகி போன்ற முனிச்ரேஷ்டர்களும் இறங்கத் தயங்கும் இப்பெருவெள்ளத்தில் தாம் இறங்கத் துணிந்த துணிச்சலையும் தம் நைச்யானுஸந்தானம் எனப்படும் அவையடக்கமாக அழகாக அருளிச் செய்கிறார்.

அடுத்து சிகரம் வைத்தாற்போல் **வேதாந்த தேசிகபதே** எனத் தொடங்கும் ஒரு அற்புதமான ச்லோகம்! இதில் ஸ்வாமி அருளிச் செய்வதாவது: ''விளையாடும் இயல்புடைய வேங்கடமலைக்கதிபதியான இப்பெருமாள் தூப்புல் பிள்ளையெனும் அறியாத சிறு பிள்ளையாகிய அடியேனை வேதாந்த தேசிகன் என்னும் ஆசார்ய பதத்தில் அமரவைத்தான்! அடியேனையே ஒரு வீணையாகக் கொண்டு தானே அதை வாசித்தருளினான்! அதனால் புறப்பட்ட நாதமே தயா சதகமென்னும் இந்த வீணாகானம்!'' என்கிறார். எம்பெருமான் மீட்டியதால் எழுந்த இனிய கானம் இது. அடியேன் வீணையென்னும் ஒரு கருவி மாத்திரமே அதை மீட்டியவன் எம்பெருமானே என்று அருளிச் செய்வது திருமலையின் சிகரத்தையே தொடவல்லதாய் உயர்ந்து நிற்கிறதன்றோ!

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய்த் திகழும் ஸ்ரீநிவாஸனுடைய தயையின் பெருமையை எடுத்துரைக்க ஒரு நிகரற்ற கவியாக ஸ்வாமி தேசிகன் அவதரித்தார். ஆனால் அவர் அருளிச் செய்த தயா சதகத்தின் பெருமையை எடுத்துரைக்க அவர்போல் இன்னொரு கவியன்றோ பிறந்துவரவேணும் என்று ஆன்றோர் போற்றுவர். இயன்றவரை ஒரு துளியாவது இங்கு காட்ட முடிந்தது எனில் அதுவும் தயா தேவியின் திருவருளாலேயே எனலாம்! ✻

தநுர்மாஸ உபந்யாஸம்

தலைப்பு:

'திருப்பாவையில் தேசிகாபதேசம்'

'தேசிக ஸேவா ரத்னம்'

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமியின் உபந்யாஸம்

இடம்:

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,

மயிலாப்பூர்

தேதி:

15.12.2021 முதல் 13.01.2022 வரை

நேரம்:

மாலை 6.30 முதல் 8 வரை

வேதபாராயண ஸபையினர்

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

28. Yathiraja Sapthathi

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The ultimate in Acharya Bhakthi has found an appropriate outlet in Sri Yathiraja Sapthathi, a landmark hymn, which caps off the matchless devotional works totalling 28 by Swami Desika. It is Sri Bhagavath Ramanuja who is referred here as Yathiraja (the King of Saints). Some of his other names are Sri Bhashyakara, Udaiyavar, Emperumaanaar, Yathipathi and Lakshmanamuni.

No amount of adulation can be too high for the great deeds of Sri Ramanuja, which included, among others, founding and upholding our Sri Sampradaya in the form of Sri Visishtaadvaita philosophy, against all odds. It is he who showed us that the means and end for all souls is Sriman Narayana and established the route to salvation. One can never be able to fully pay back for this benevolence but can only make an attempt by singing the praise of the Acharya, as Swami Desika has succinctly put in the 'Sishya Kruthya Adhikaram' of Srimath Rahasya-Thraya Saaram. "பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே" - அதிகார ஸங்க்ரஹம் (38).

Yathiraja Sapthathi comprises 74 verses (Sapthathi means seventy), perhaps signifying the number of the Simhaasanaadhipathis Sri Ramanuja appointed to enable our Sampradaya thrive. In terms of number of verses, this hymn occupies the third spot after Daya Sathakam and Achyutha Sathakam, a pointer as to how much Sri Desika was captivated by the greatness of Yathiraja. The author has, as in Daya Sathakam, handled several metric scales in this great work. This is another hymn named by our Acharya himself as evidenced by the 73rd Sloka.

On a Chiththirai-Thiruvaadhirai day, the Thiru Avathara day of Sri Ramanuja, Swami Desika was immersed in his experience of the great saint's virtues and (his idol's) beauty. The Sri Vaishnavites present there were a moved lot and prayed to our Swami to compose a hymn on Yathiraja so that all can savour the devotional fervour for ever. To their delight, Sri Desika readily obliged and came

up with this masterpiece, also a perfect recipe for posterity. The incident has been recorded in the 71st Sloka.

The hymn starts off with the first 10 Slokas dedicated to salutation of our Acharya Parampara, to which Sriman Narayana is the principal preceptor (Prathama Acharyan). The line-up in the descending order goes like this: The Lord, His Consort, Vishvaksena, Satakopa, Naathamunigal, UyyakKondaar, Manakkaal Nambi, Aalavandhaar, Periya Nambi and Sri Ramanuja.

The 11th verse beautifully describes the form and virtues of Sri Ramanuja. "I pay homage to one who is wearing the sacred thread; who has vertical marks (Thiruman on foreherad); who is the fruit of the good deeds of all the three worlds; who carries a triple-staff (Tridandam) in his hand; who is the leader of the surrendering congregation; who has a tuft of hair as his crown — that is the King of Ascetics."

உபவீதிநம் ஊர்த்வபுண்ட்ரவந்தம்
த்ரிஜகத் புண்யபலம் த்ரிதண்டஹஸ்தம்|
சரணாகத ஸார்த்தவாஹமீடே
சிகயா சேகரிணம் பதிம்யதீநாம்||

The first 11 Slokas are a must-recite for everyone as prescribed in scriptures as our daily routine. If, for some reason, it is not possible, one needs to chant at least the above (11th) Sloka.

Thereupon, it is all the glory of Sri Bhashyakara, expressively, exhaustively and exquisitely broughtforth as only Swami Desika can. Some of the most significant ones are given below with the Sloka number in parentheses.

Sri Ramanuja being an incarnation of the Five Weapons of the Lord (12); of Vishvaksena (32); and Dhaththaathreya (63).

He being the lustrous pivotal pendant in the line-up of our Sampradaya Acharyas (15).

His feet being more important for salvation than even that of the Lord (20).

The implication of his preaching-gesture (24 & 25).

Sri Ramanuja being an amalgam of the three luminous bodies — the Fire, the Moon and the Sun (27).

He being the saviour of the Supreme Being (Brahmam) from the devious designs of perverted schools of philosophy (38).

The enormity and greatness of his works (47 to 54).

The fate of the detractors of his distinguished works (55).

The pure water from a well (SaalaikKinaru) offered to Lord Varadaraja by Sri Ramanuja, in turn, taking the form of showers of mercy pouring on us in all abundance (62).

The divine works of Sri Ramanuja investing in him (Sri Desika) all-conquering power (68).

The greatness of the dust of the feet of Sri Ramanuja (64).

Other philosophies taking a hurried hiding in front of Sri Ramanuja Sidhdhantha — Visishtaadvaita (70).

The author brings into play dual connotations aplenty in this virtuoso composition of his. Especially enchanting among them are: the ones involving Lord Krishna and Sri Ramanuja (13th Sloka); Sri Ramanuja and a mountain (16); the great works of Sri Ramanuja and the Kalpa tree (31).

In a categorical exposition of his contrasting attitude towards those who tread Sri Ramanuja's path and the others, Swami Desika declares thus in the 41st Sloka: "I bear the lotus foot of the noble followers of Sri Ramanuja on my bowed head forever. By the same token, let it also be known that my left foot will be placed on the head of those with a raging madness in espousing the cause of other schools of philosophy."

A classic metaphor marks the 72nd verse in which Sri Desika suggests that (it is enough) the roar of 'Kavi-Thaarkika Simham' — that is Yathiraja Sapthathi — be passed on to the ears of the rivals who entertain the thought of meeting us in a debate."

Finally, as Phala Sruti, the author prays in Sloka 73, "May the hymn bestow on the reader devotional intellect which encompasses both the worlds of the Lord — Leela Vibhuthi and Nithya Vibhuthi."

And the concluding verse declares that those who learn the hymn will see the righteous path as clearly as an Indian gooseberry in the palm (உள்ளங்கை நெல்லிக்கனி) and shall shine in the world so lustrously as to render the jealous rivals as ineffective as stars in the daytime.

(Concluded)

பஞ்சபர்வ உத்ஸவங்கள்

திருப்பாண் ஆழ்வார் திருநக்ஷத்ரம்